# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of District Munsif cum Judicial Magistrate No. I, Usilampatti**

**Case No. 4/2023**

**Deposition of Witness for Prosecution : PW4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **மணிகண்டன்** | Caste | : | |
| Father/Husband Name | : | **ராஜு** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(all accused absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 11.02.2026**

**முதல் விசாரணை** :

நான் திருமங்கலம் கீழக்கோட்டையில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன் மகள் முறை ஆவார். கடந்த 2020ம் ஆண்டு அ.சா.1 திருமணம் முடிந்து 8 மாதம் கழித்து வீட்டில் பிரச்சனை என்றும், அவரது அப்பா அ.சா.2ற்கு போன் மூலம் தகவல் சொல்லியுள்ளார். உடனே அ.சா.2 என்னை தொடர்பு கொண்டு மேற்படி விபரத்தை சொல்லி என்னை உடனே சென்று பார்க்க சொன்னார். நானும் எனது மனைவி முத்துமணியும் சென்று பார்த்தோம். எனது மனைவி அ.சா.1 நதியாவிற்கு அறிவுரை வழங்கினார். அ.சா.1, அ.சா.2,அ.சா.3 ஆகியோர் ரூபாய் 15 லட்சத்தை 2, 3 எதிரிகளிடம் கொடுத்தார்கள் அப்போது நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மற்ற விபரங்கள் தெரியாது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் திருமங்கலம் கீழக்கோட்டையில் வசித்து வருகிறேன். அ.சா.2 பாலமுருகன் எனது உடன் பிறந்த சகோதரன் கிடையாது என்றால் சரிதான். எந்த தேதியில் மேற்படி பணம் கொடுத்தோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் நதியா அ.சா.1 கர்ப்பமாக இருந்தார். மேற்படி பணம் கொடுத்தது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்கினார்களா என்றால் இல்லை. பணம் கொடுத்ததாக சொல்லப்பட்டதற்கு பின்பு நடந்த விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் அ.சா.2 மற்றும் 3 எதிரி 2, 3 இடம் பணம் கொடுக்கவில்லை என்றும் என்னை உடன் அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.3 எனது மனைவிக்கு சித்தப்பா மகள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d. Manikandan
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.